1982 ஏப்ரல் 1]

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழாக சிவில் என்ஜினீயருக்குப் பதிலாக, மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படித்தவர்களைப் போட்டிருப்பது பற்றி கேள்வி. சிவில் என்ஜினீயரிங்கிலேயே, டிப்ளோமோ பொறியியல் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே. அவர்களைத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிவதற்கு அரசு பயன் படுத்த முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கனவே பட்டப்படிப்பு படித்தவர்களுக்கும், டிப்ளோமா படித்தவர்களுக்கும் இடையில் அவர்களுக்குள்ளாகவே சர்ச்சை இருந்துக் கொண்டிருக்கிறது. யார் முக்கியமானவர்கள் யாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதிலேயிருந்து, கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நெடுஞ்சாலைத் துறையும், பொதுப்பணித் துறையும் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தக் கொள்கையில் முடிவு எடுத்தபின் இதில் அறிவிக்கலாம்.

இடைப்பார்டி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 710—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் 1981, 1982 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே ''இல்லை'' என்று சொன்னார்கள். இன்று ஏப்ரல் முதல் தேதி என்ற காரணத்தால் இல்லை என்று சொல்கிறார்களோ என்று எண்ணுகிறேன்....... (குறுக்கீடு).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் பதில் சொன்னால், அது எந்தத் தேதியில் சொன்னாலும் ஒரே பதில் தான். ஏப்ரல் முதல் தேதிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, தனி மருத்துவ மனை இல்லை என்றாலும்கூட, இடைப்பாடி நகரிலே ஏற்கெனவே உள்ள பொது மருத்துவமனையிலே ஒரு தனிப் பல்பிரிவு ஏற் படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை யாக இருக்கிறது. முதலிலே பெரிய மருத்துவ மனைகளில் எல் லாம் இந்த டென்டல் கிளினிக் பிரிவை ஆரம்பித்த பிறகு, இந்த மருத்துவமனையைப் பற்றி சிந்திக்கலாம் என்று நினைக்கி றேன். இப்போது டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ் பிடலில் எல்லாம் இந்தப் பிரிவு இருக்கிறது. அதே மாதிரியாக தாலுக்கா மருத்துவமனைகளில் இல்லை. இப்போது மொத்தம் 93 இடங்களில் செயலாற்றிக் கொண்டு வருகிறது. மீதம் இருக் கும் மருத்துவமனைகளிலும் இந்தப் பிரிவை ஏற்படுத்தி விட்டு பிறகு இதற்கு வரலாம். தற்போது இதைப்பற்றி சிந்திப்பதற்கு இல்லை.

கோவில்பட்டி நகராட்சியில் கூடுதல் துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்கும் திட்டம்

*வினா எண் 711—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி நகராட்சியில் மக்கள் தொகை உயர்ந்துள்ளதை முன்னிட்டு கூடு தல் துப்புறவுத் தொழிலாளர்களை நியமிக்க அரசுக்கு அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்விலுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS